<u>**வாக்குமூலம்**</u>
<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>
<u>**வழக்கு எண் : SC.No.749/2023**</u>
<u>**வழக்கு சாட்சி PW-9**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜீவ்காந்தி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 13th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் இராவுத்தர்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். 20.10.2022ம் தேதி, மதியம் நேரம் குறிப்பாக நியாபகமில்லை. வெள்ளிகுளம் பஸ்ஸ்டாப் அருகே நானும், எனது மைத்துனர் ரமேஷிம் இருசக்கரவாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, எதிரி கண்ணன் மற்றும் முத்துக்குமார் ஆகியோர்களை போலீசார் கைது செய்து விசாரித்தார்கள். இடப்பிரச்சனை சம்பந்தமாக வெட்டியது குறித்து போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை போலீசார் பதிவுசெய்தார்கள். அதில் நானும், ரமேஷீம் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

இந்த வழக்கில் என்னை சாட்சியாக போலீசார் சேர்த்துள்ளார்கள் என்ற விபரம் எப்போது தெரியும் என்றால் 2 மாதங்களுக்கு முன்னால் தெரியும். நான் அ.சா.1ன் மூலம் அந்த விபரத்தை தெரிந்து கொண்டேன். என்னுடைய பெயர் மற்றும் விபரங்களை அ.சா.1 தான் காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்றால் சரிதான். நானும், சாட்சி ரமேஷீம் அ.சா.1ன் ஏற்பாட்டின் பேரில் ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. 2வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறாக போலீசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.